**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.100/2019**

**NAME** : சித்ரா
**FATHER NAME** :
**VILLAGE** :
**TALUK** :
**CALLING** :
**RELIGION** :
**AGE** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 13.04.2023.**

குறுக்கு விசாரணை

நான் குடியாத்தத்தில் எண்.9, ராஜா நகரில் குடியிருக்கிறேன். நான் வேலை பார்க்கவில்லை. என் கணவர் பாரஸ்ட் ரேஞ்சராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். ஓய்வு பெற்று 12 வருடம் ஆகிறது. பிரதிவாதி ஜெய்சங்கர் பக்கத்து ஊர்க்காரர். வலசையைச் சேர்ந்தவர். இரண்டு பேரும் பக்கத்து பக்கத்து கிராமம் என்பதால் குடும்ப நண்பர்கள். நான் அவர் வீட்டிற்கு சென்றதில்லை. அவர்கள் வீட்டில் உள்ளவர்களை எனக்கு தெரியும். அவர்கள் வந்து போயிருப்பார்கள் அதனால் எனக்கு தெரியும். 02.04.2018ல் ரூ.5லட்சம் கொடுத்தேன். 05.04.2018ல் ரூ.5லட்சம் கொடுத்தேன். 16.04.2018ல் ரூ.5லட்சம் கொடுத்தேன். 18.04.2018ல் ரூ.5லட்சம் கொடுத்தேன். 23.04.2018ல் ரூ.5லட்சம் கொடுத்தேன். வியாபாரத்திற்காக அவ்வப்போது கடன் வாங்குவார். இந்த கடனுக்கு முன்னால் என்னிடம் எந்த கடனும் வாங்கியதில்லை. கம்மியாக கைமாற்றாக வாங்குவார். மறுபடியும் மாற்றி இதற்கு முன்னால் வேறு எந்த கடனும் வாங்கியதில்லை என்றார். நான் எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். எனக்கு இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள். மகன் கார்த்திகேயன் வேலை பார்க்கிறார். நான் மாட்டுப் பண்ணை மாமியார் வீட்டில் கொடுத்த நிலத்தில் வைத்துள்ளேன். நானே உடனிருந்து ஆள்வைத்து பார்த்துக் கொள்கிறேன். அதில் இருந்து வந்த வருமானத்தைதான் கடனாக கொடுத்தேன். மாட்டுப்பண்ணை கள்ளப்பாடியில் கடந்த 10வருடத்திற்கு முன்பு வரை திருமணம் ஆனதிலிருந்து வைத்திருந்தேன். அதற்குப் பிறகு மாட்டுப் பண்ணை நிறுத்தியதில் இருந்து எனக்கு மாட்டுப் பண்ணையிலிருந்து வருமானம் கிடையாது. இந்த விவரத்தை நான் என் வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரி. இந்த ரூ.25லட்ச ரூபாய் என் சேமிப்பு பணம். வீட்டிலேயே சேமித்து வைத்திருந்தேன். அவர் சம்பளத்தில் இருந்து கொடுக்கும் தொகையை நான் சேமித்து வைத்திருந்தேன். நான் சேமித்து வைத்திருந்ததற்கு ஆதாரம் கிடையாது. பணம் வேண்டும் என்று 2018ல் வந்து கேட்டார். தேதி ஞாபகம் இல்லை. எந்த மாதம் கேட்டார் என்று ஞாபகம் இல்லை. முதலில் ரூ.5லட்சம் கேட்டார். முதல் கடன் 02.04.2018 அன்று கொடுத்தேன். 1 மாதத்திற்கு முன்பே கடன் கேட்டார். பணம் இருக்கிறது, வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என போனில் சொன்னேன். அவருடைய செல்போன் நெம்பர் எனக்கு தெரியும். பணம் கொடுக்கும்போது என் கணவர், பத்திரம் எழுதுபவர் அருண்குமார், மனோகரன், முருகேசன் ஆகியோர் இருந்தார்கள். சாயந்திரம் 4 மணிக்கு கொடுத்தேன். சாட்சிகளை முன்னாடியே எனக்கும் தெரியும், அவருக்கும் தெரியும். சாட்சிகளை ஜெய்சங்கர்தான் அழைத்து வந்தார். ரூ.100க்கு 2 ரூபாய் வீதம் வட்டி தருவதாகவும் பத்திரத்தில் எழுதி கொடுத்தார். எவ்வளவு ரூபாய் பத்திரம் என ஞாபகம் இல்லை. பத்திரத்தை ஜெய்சங்கரே வாங்கிவந்தார். எந்த ஆபிசில் பத்திரம்

.....2

வாங்கினார் என தெரியாது. பத்திரம் அவர் பெயரில்தான் வாங்கி வந்தார். எவ்வளவு ரூபாய் பத்திரம் என எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் தான் ஜெய்சங்கர் கையெழுத்து போட்டார். சாட்சிகளும் அந்த பத்திரத்தில்தான் கையெழுத்து போட்டார்கள். அந்த பத்திரம் ஒரே தாள்தான். பணத்தை பிரதிவாதியிடம் கொடுத்தது யார் என்றால் நான் என் கணவரிடம் கொடுத்து என் கணவர் பிரதிவாதியிடம் கொடுத்தார். நான் நேரடியாக பிரதிவாதிக்கு பணம் கொடுக்கவில்லை. சாட்சிகளை இதற்கு முன்பு நான் பார்த்துள்ளேன். சாட்சிகள் இருவரும் குடியாத்தத்தை சேர்ந்தவர்கள். பத்திரத்தை எழுதியவரும் குடியாத்தம். பத்திரம் எழுதுபவர் என்ற விவரம் எனக்கு முன்னாடியே தெரியும். பிரிண்ட்டில் எழுதி வந்தார்கள். அதில் வில்லை ஒட்டி கையெழுத்து போட்டார்கள். பிரிண்டட் பத்திரம் கையால் எழுதினார்கள். பத்திரத்திற்கும் பாண்டிற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும். பத்திரம் வேறு, பாண்டு வேறு என்றால் சரி. பிரதிவாதி பத்திரத்தில்தான் கையொப்பம் போட்டு கொடுத்தார். பாண்டில் இல்லை என்றால் சரி. 5 கடனுக்கும் ஒரே மாதிரி பத்திரத்தில்தான் எழுதிக் கொடுத்தார். பணம் கொடுக்கும்போது என் கணவரை தவிர்த்து மற்ற குடும்ப உறுப்பினர்கள் யாரும் இல்லை. பணம் கொடுத்ததற்கு கணக்கு வைத்துள்ளீர்களா என்றால் இல்லை. நான் வருமான வரி கட்டுகிறேன். 10 வருடமாக வருமானவரி கட்டுகிறேன். அதற்கு ஆதாரம் என்னிடம் உள்ளது. 1 வருடம் 2 வருடத்திற்கானது உள்ளது. என்னால் ஆதாரம் தாக்கல் செய்ய முடியும். கடைசியாக போன வருடத்திற்கு முந்தைய வருடம் செலுத்தினேன். எவ்வளவு செலுத்தினேன் என ஞாபகம் இல்லை. என் பெயரில் சொத்துக்கள் தென்னந்தோப்பு, மாந்தோப்பு உள்ளது. தோப்பை மொத்த லீசிற்கு விடும்போது வருமானம் வரும். கள்ளப்பாடியில் நிலம் உள்ளது. சுப்பிரமணி என்பவருக்கு லீசிற்கு விட்டுள்ளேன். அதற்கு ஆதாரம் இல்லை. வருடத்திற்கு தென்னந்தோப்பிற்கு ரூ.5 லட்சம், மாந்தோப்பிற்கு வருடத்திற்கு ரூ.5-1/2 லட்சம் வருமானம் வரும். இதைத் தவிர்த்து வேறு வருமானம் கிடையாது. இதே பிரதிவாதி பெயரில் என் மகனும் கடன் கொடுத்ததாக வழக்கு போட்டுள்ளார் என்றால் சரி. அவரும் ரூ.25 லட்சம் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக வழக்கு போட்டுள்ளார். முதல் கடன் 02.04.2018ல் கொடுக்கும்போது சாட்சி முருகேசன், மனோகரன் இருந்தார். யார் எழுதியது என்றால் அருண்குமார். 05.04.2018 இரண்டாவது கடன் கொடுக்கும்போது சாட்சி பூபதி, விஜயன் இருந்தார். எழுதியது அருண்குமார். மூன்றாவது கடன் 16.04.2018ல் கொடுக்கும்போது சாட்சி பூபதி, விஜயன் இருந்தார். எழுதியது அருண்குமார். நான்காவது கடன் 18.04.2018ல் கொடுத்தேன். எழுதியது தியாகராஜன். பிரிண்டட் பாண்டில் எழுதினார். ஜெய்சங்கர் அழைத்து வந்தார். பணம் ஜெய்சங்கரிடம் கொடுத்தபிறகு ஜெய்சங்கர் கையொப்பம் போட்டார், சாட்சிகள் கையொப்பம் போட்டார்கள். பாண்டு எழுதியவர் கையொப்பம் போட்டார். என் கணவர் சாட்சி கையெழுத்து போடவில்லை. எல்லா கடன்களையும் மாலை 4 மணிக்கு கொடுத்தேன். மொத்தமாக ரூ.25 லட்சம் கேட்டார். நான் பணம் வந்தபிறகு கொடுக்கிறேன் என சொன்னேன். ஒவ்வொருமுறை பணம் கேட்பார், நான் வந்து வாங்கிக்கொள்ளுங்கள் என சொல்வேன். பாண்டில் வியாபாரத்திற்காக வாங்கியது என எழுதவில்லை. 5 பாண்டுகளை எழுதியது ஒரே நபர் என்றால் இல்லை. 18.04.2018 பாண்டும், 23.04.2018 பாண்டும் தியாகராஜன் எழுதியது. வீட்டண்டே எங்கள் முன்னாடியே எழுதினார். (வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.